

කාර්ය සාධන වාර්තාව
செயல் திறன் அறிக்கை
PERFORMANCE REPORT
2021

ශ්‍රී ලංකා දුම්රිය දෙපාර්තමේන්තුව
இலங்கை புகையிரத திணைக்களம்
SRI LANKA RAILWAY DEPARTMENT



செயல் திறன் அறிக்கை – 2021

இலங்கை புகையிரத திணைக்களம்

உள்ளடக்கம் பக்கம்

01.அத்தியாயம்– தாபன பகுதிZசெயற்பாட்டு சாரம்சம்

1.1 அறிமுகம் 1

1.2 தாபனத்தின் கூற்று , இலட்சியம், நோக்கு 3

1.3 பிரதான விடயங்கள் 3

1.4 அமைப்பு அட்டவணை 5

1.5 இலங்கை புகையிரத திணைக்களத்தின் பிரதான உப திணைக்கள பிரிவு, அலகு, கட்டமைப்பு 7

1.6 இலங்கை புகையிரத திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனம்Zநிதியம் 8

1.7 வெளிநாட்டு உதவி கிடைக்கும் கருத்திட்டங்களின் தகவல்கள் 9

02 அத்தியாயம் - முன்னேற்றமும் முன் நோக்கும் 10

விஷேட வெற்றி , சவால்களும் முன் நோக்கும்.

03. அத்தியாயம – வருடத்தின் மொத்த நிதி முன்றேற்றங்கள்

3.1 நிதி செயல் திறன் வெளிப்பாடு 21

3.2 நிதி நிலைமை பற்றிய வெளிப்பாடு 23

3.3 நிதி வழிமுறை சம்பந்தமான வெளிப்பாடு. 25

3.4 நிதி வெளிப்பாட்டு குறிப்பு 27

3.5 வருமாணம் சேகரிப்பு செயல் திறன் 27

3.6 ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு பயன்படுத்தல் செயல் திறன் 27

3.7 நி. பி 208ன் படி , வேறு அமைச்சுZதிணைக்கள பிரதிநிதிகளாக இத் திணைக்களத்திற்கு Zமாவட்ட செயலகத்திற்குZமாகான சபைக்குZ ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 27

3.8 நிதி அல்லாத சொத்துக்கள் பற்றி அறிக்கையிடும் செயல் திறன் 28

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 28

04. அத்தியாயம் – செயல் திறன் காட்டி 28

4.1 நிறுவனத்தின் செயல் திறன் காட்டி(செயற்பாட்டு திட்டத்தை அடிப்படையாக கொண்டு) 28

05. அத்தியாயம் – நிலையான அபிவிருத்தி நோக்கத்தை (SGD) அடைந்து கொள்ளும் செயல் திறன் 29

5.1 கண்டறியப்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கு 29

5.2 நிலையான அபிவிருத்தி இலக்கை வெற்றியடைதலும்Zசவால்களும். 30

6. அத்தியாயம் - மணித வள பகுதி 31

6.1 சேவையாளர் தொகை முகாமைத்துவம். 31

6.2 நிறுவனத்தின் செயல் திறன் கருதி மணித வள பற்றாக்குறையை அல்லது மேலதிகத்தை தாக்கும் விதம் 31

6.3 மணித வள அபிவிருத்தி 31

7. பிரிவு அனுகூல அறிக்கை 32

01 அத்தியாயம்

1.1 அறிமுகம்

இலங்கை போக்குவரத்தின் முன்னோடியான இலட்சியத்தை மேற் கொள்ளும் இலங்கை புகையிரத திணைக்களம் 1864 திசம்பர் 26ம் திகதி தனது முதலாவது வெள்ளோட்டத்தை ஆரம்பித்ததுடன் தனது இலட்சியப் போக்கை 158 வருட காலமாக வழங்கி வருகின்றது.

பிரதான போக்குவரத்து வழங்குனராக இலங்கை புகையிரத சேவை 2021ம் வருடத்தில் பொருளாதார அபிவிருத்திற்காக பங்களிப்பை வழங்கிக் கொண்டு தனது சேவை நடவடிக்கைகளை தொடராக கொண்டு செல்கின்றது. 2021ம் வருடத்தில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் தொடராக செயற்பட்டு சூழல் பற்றுள்ளதும் சிக்கனமானதுமான போக்குவரத்து வழி முறையாக தமது சேவை நடவடிக்கைகளை வினைத் திறனுடன் மேற் கொள்கின்றது.

இலங்கை புகையிரத திணைக்களம் அரசாங்கத்தின் பிரதான திணைக்களமாக போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்றது. இத் திணைக்களம் புகையிரத கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படுவதுடன் புகையிரத பொது முகாமையாளர் புகையிரத திணைக்களத்தின் பிரதானியாக செயற்படுகின்றார். இலங்கை புகையிரத திணைக்களத்தில் கிளை மற்றும் அலகுகள் 14ன் கீழ் நிருவாக நடவடிக்கைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், உப திணைக்களத்தின் கிளை, அலகு பிரதானிகளுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களின் கீழ் நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றது.

நாட்டின் 25 மாவட்டங்களில் 21 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் பாதை கி.மீ 1478.52 அளவுள்ள தூரத்தை புகையிரத நிலையங்கள் 418 உடன் பயணிகளுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குகின்றது. தனது முக்கிய குறிக்கோளான பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்கு பாதுகாப்பானதும், விசுவாசமுடைளதுமான குழைத்த நேரத்திற்கு பயனிக்கும் சிக்கனமானதும் , வினை திறன் மிக்கதுமான புகையிரத போக்குவரத்து சேவையை வழங்குதலும் சூழல் பற்றுள்ளதும் சிக்கனதுமான வினைத் திறன் மிக்க சேவையை வழங்குவதற்கு தனது பாரிய அர்ப்பனிப்புடன் செயல் படுகின்றது. 2021ம் வருடத்திலும் பல்வேறு தடைகளுக்கும் சவால்களுக்கும் மத்தியிலும் தனது சேவையை தொடராக கொண்டு செல்ல முடிந்துள்ளது.

உலகத்தையே ஆட்கொண்ட கொரோனா தொற்றின் தாக்கம் இலங்கையிலும் காணப்பட்டதுடன், 2021 மே மாதத்திலிருந்து ஒக்டோபர் மாதம் வரை ஐந்து மாத காலம் நாடு அடிக்கடி முடக்கப்பட்டது. அதே போன்று சகல புகையிரத போக்குவரத்து தடவைகளும் மட்டுப்படுத்தப்பட்டதுடன், அக்காலவெல்லையில் மட்டுப்படுத்தப்பட்ட நிலைமையின் கீழ் புகையிரத போக்குவரத்து மேற் கொள்ளப்பட்டதுடன், மீண்டும் ஒக்டோபர், நவம்பர், திசம்பர், மாதங்களில் அடிக்கடி நாட்டின் வலையங்கள் வகுக்கப்பட்டு முடக்கப்பட்டதால் புகையிரத போக்குவரத்தும் இடைநிறுத்தப்பட்டது. அதன் கீழ் மிகவும் குறைந்த புகையிரத தடவைகள் போக்குவரத்தில் இணைக்கப்பட்டது. அதே போன்று சிறத்த சுகாதார வழிகாட்டலின் கீழ் பயணிகள் போக்குவரத்து மேற் கொள்ளப்பட்டதுடன், புகையிரதத்தின் பயனித்த

பயனிகள் தொகையும் மிகவும் குறைந்து காணப்பட்டது. இக் கொரோனா நிலைமை 2021ம் வருடத்தில் பயணிகள் தொகை மற்றும் வருமானம் குறைந்தமைக்கு மிகவும் முக்கியமானதொரு காரணமாகும்.

இவ்வாறான பல்வேறுபட்ட தடைகளின் கீழும் பயணிகளுக்காக வேண்டி வினைத் திறன் மிக்கதும் வசதியுடையதுமான புகையிரத சேவையை வழங்குவதற்காக பல்வேறுபட்ட செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டது. அதன் கீழ் சீனா மற்றும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன புகையிரதங்கள துர்ரப் பயண சேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதுடன் புதிய புகையிரதங்களை அறிமுகப்படுத்தல் மூலம் பொதுப் பயணிகளின் போக்குவரத்து தேவையை வழங்குவதற்கு இலங்கை புகையிரத திணைக்களம் திடமாக செயற்பட்டு செயலாற்றியது.

நோக்கு

இலங்கையில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் மிகவும் விசுவாசமுள்ள போக்குவரத்து வழங்குனராக திகழ்தல்.

இலட்சியம்

பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்காக பாதுகாப்பானதும், விசுவாசமுள்ளதும் வினைத்திறன் மிக்கதுமான புகையிரத சேவையை வழங்குதல்.


நோக்கம்

- புகையிரத பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து பிரிவுகளின் பங்களிப்பை மேம்படுத்தல்.
- புகையிரத இயக்க செயற்பாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- பயணிகள் புகையிரத சேவையின் வசதிகளை மேம்படுத்தல்.
- புகையிரத சேவையாளர்களினதும் வளங்கள் பிரயோகத்தினதும் திறனை மேம்படுத்தல்.
- புகையிரத வருமானத்தை கூட்டிக் கொள்ளல்
- மணித வளத்தை அபிவிருத்தி செய்தல்.
- புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

1.3 பிரதான விடயங்கள்

- பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளை செயற்படுத்தல்
- பொருட்கள் போக்குவரத்தை மேற் கொள்ளல்.
- விஷேட பயணிகள் புகையிரத சேவையை நடைமுறைப்படுத்தல்.

1.4 தினைக்கள அமைப்பு



Level 1 **G.M.R** –General Manager railway

Level 2 **AGM(A)** – Addl. General Manager(Admin) , **AGM(M)** - Addl. General Manager(Mechanical), **A.G.M. (M)** - Addl. General Manager(Infrastructure), **A**.**G.M. (O**)- Addl. General Manager(Operation), **C.F.O** – Chief Finance officer

Level 3 **DGM**-Deputy General Manager (Admin) , **DGM(T**) - Deputy General Manager (Training & HR) , **CEM** – Chief Engineer (Motive Power), **CME**- Chief Mechanical Engineer, **CE(W)** Chief Engineer (Way & works), **CSTE-** Chief Engineer (Signal & Telecommunication), , **DGM(C**) - Deputy General Manager (Commercial) , **DGMT**- Deputy General Manager (Transport) , **CIA**- Chief Internal Auditor , **CA**- Chief Accountant , SRP- Superintendent(RP) , **DGMP** - Deputy General Manager (Procurement) , **D P** – Director (Planning)

Level 4 **D(A)**-Director (Admin) , **DCET** - Deputy Chief Engineer (Training & HRB), **DEMO** - Deputy Chief Engineer (Motive Power), **DEM**- Deputy Chief Engineer (Mechanical), **DEME** - Deputy Chief Engineer (Electrical) , **DEW** - Deputy Chief Engineer (Way & Works) , **DEBR** - Deputy Chief Engineer (Way & Bridges), **DEBU** - Deputy Chief Engineer (Property Development &Building) , **DES** - Deputy Chief Engineer (Signal & Telecommunication), **SC** – Superintendent Commercial , **ST** – Superintendent Transportation

Level 5 **SEM** – SuperintendentEngineer(Motive Power),**SEME**- SuperintendentEngineer(Mechanical),**SEW** - SuperintendentEngineer(Way & works), **SS** – Surveyor Superintendent,**SES** - SuperintendentEngineer(Signal & Telecommunication), **SEP** -SuperintendentEngineer (Planning Project) , **DSSM** – DeputySuperintendent (Sales & Marketing) ,**DIT** - DeputyDirector (Information Technology) , **DSRP** - DeputySuperintendent (R.P) , **SP** – Superintendent (Procurement)

Level 6 **ADA** – Assistant Director (Admin) / Deputy Director (Admin),**LGO** – Legal Officer , **ET** – Engineer (Training & HRB) , **EM** – Engineer (Motive Power),**ATM** – Asst. Transportation Superintendent (Mechanical) ,**ATE** - Asst. Transportation Superintendent (Energy Conservation) ,**EM** – Engineer (Mechanical), **EE**– Engineer (Electrical) ,**CM** – Chemist & Methodologist ,**EW** – Engineer (Way & Works) , **S** – Surveyor ,**ES** – Engineer (Signaling & Telecommunication),**EP** – Engineer (Planning & Project) , **AC** – Asst. Director / Deputy Director (Cost) ,**AST**– Asst. Superintendent (Transportation / Commercial), **AC** – Accountant , **ADI** – Asst. Director (Information Technology) ,**ASRP**-Asst. Superintendent (R.P), **ASP**– Asst.Superintendent (Procurement), **ADP** – Asst. Director (Planning)

1.5 இலங்கை புகையிரத திணைக்களத்தின் உப திணைக்களம், பிரிவுகள் , மற்றும் அலகுகள் அமையப் பெற்றுள்ள விதம்.

உப திணைக்களம், பிரிவுகள் ,அலகுகள்

#	உப திணைக்களம்Z அலகு	திணைக்களம்Zஉப திணைக்களம்Z அலகுகளின் பிரதானிகள்
01	புகையிரத பொது முகாமையாளர் காரியாலயம்	புகையிரத பொது முகாமையாளர்
02	பிரதான இயந்திர பொறியியலாளர் உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (இயந்திரம்)
03	பிரதான பொறியியலாளர் (பாதைZவேலைத்தளம்) உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (பாதைZவேலைத்தளம்)
04	பிரதான பொறியியலாளர் (இயக்க வலு) உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (இயக்க வலு)
05	பிரதான பொறியியலாளர் (சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு) உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு)
06	பிரதான கணக்காளர் உப திணைக்களம்	பிரதான நிதி உத்தியோகத்தர்
07	வாணிப உப திணைக்களம்	பிரதி முகாமையாளர் (வாணிபம்)
08	புகையிரத களஞ்சிய உப திணைக்களம்	பிரதி முகாமையாளர் (கொள்வனவு)
09	போக்குவரத்து உப திணைக்களம்	பிரதி முகாமையாளர் (இயக்கம்)
10	இலங்கை புகையிரத பாதுகாப்பு சேவை	பாதுகாப்பு அதிகாரி
11	இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்	பிரதி முகாமையாளர் (பயிற்சி மற்றும் மணித வளம்)
12	பிரதான ஆகுசெலவு உத்தியோகத்தர் காரியாலயம்	பிரதான ஆகு செலவு உத்தியோகத்தர்
13	திட்டமிடல் பகுதி	பணிப்பாளர் (திட்டமிடல்)
14	தரவுகள் ஒருங்கினைப்பு அலகு	முகாமையாளர் தரவுகள் ஒருங்கினைப்பு

அட்டவணை இல 01

புகையிரத பாதை கட்டமைப்பு

பாதை	தூரம் கி.மீ	புகையிரத நிலைய எண்ணிக்கை	உப புகையிரத நிலைய எண்ணிக்கை	புகையிரத தரிப்பிடம்
கரையோர பாதை (கொழும்பு கோட்டையிலிருந்து பெலிஅத்த வரை)	186	41	33	0
பிரதான பாதை (கொழும்பு கோட்டை - பதுளை வரை)	292.38	45	33	26
மாத்தளை பாதை (பேராதெனிய - மாத்தளை வரை)	33.75	06	06	12
புத்தளம் பாதை (ராகம - புத்தளம் வரை)	119.57	19	25	0
புத்தளம் அருவக்காடு பாதை	37.00	01		
களனிவெளி பாதை (மருதானை - அவிஸ்ஸாவெல வரை)	59.27	11	19	7
துறைமுக பாதை	7.00	01	-	-
கொலன்னாவ பாதை	3.18	01	-	-
வடக்கு பாதை (பொல்கஹவெல – கங்கேசன்துறை)	339.47	31	26	17
தலை மன்னார் பாதை (மதவச்சி - தலை மன்னார்)	106.06	07	04	0
மிஹிந்தளை பாதை	13.50	01	0	02
மட்டக்களப்பு பாதை (மாஹோ – மட்டக்களப்பு	211.11	14	17	05
திருகோனமலை பாதை (கல்ஓயா சந்தி – திருகோனமலை)	70.23	04	02	02
மொத்தம்	**1478.52**	**182**	**165**	**71**

1.6 திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனம்Zநிதியம்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் கீழ் வேறு நிறுவனங்களோ நிதியங்களோ இல்லை

1.7 வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள்

#	வகை	கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவு அ.டொ. ரூபா.மி	தற்போதைய முன்னேற்றம்
01	புகையிரத என்ஜின் 10 (இந்திய கடண் உதவி)	42.5	கொள்வனவு முடிவுற்றுள்ளது
02	பவர்செட் 06 (இந்திய கடண் உதவி)	58.04	கொள்வனவு முடிவுற்றுள்ள
03	பயணிகள் பெட்டி 160 (இந்திய கடண் உதவி)	86.00	2021ம் வருடத்தில் 80 பெட்டிகள் கிடைக்கப் பெற்றுள்ளது
04	குளிரூட்டப்பட்ட பவர்செட் 02 கொள்வனவு செய்தல் (இந்திய கடண் உதவி)	22.40	20% வீதமான முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.
05	எரிபொருள் தாங்கி 30 மற்றும் கன்டேனர் ப்ளட் வெகன் 20 கொள்வனவு செய்தல் (இந்திய கடண் உதவி)	4.26	கொள்வனவு முடிவுற்றுள்ளது
06	மலை நாட்டு புகையிரத பாதைக்காக பவர்செட் தொகுதி 09 கொள்வனவு செய்தல் (சீனா)	93.86	கொள்வனவு முடிவுற்றுள்ளது
07	மலை நாட்டு புகையிரத பாதைக்காக புகையிரத என்ஜின் 12 கொள்வனவு செய்தல் (அமெரிக்கா)	42.50	அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

அட்டவனை இல 03

02ம் அத்தியாயம்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் முன்னேற்றமும் முன்நோக்கும் .....

நாட்டின் போக்குவரத்து கட்டமைப்பானது நாட்டின் உயிர் நாடியாகும். போக்குவரத்து வசதிகளின்றி நாட்டின் அபிவிருத்தி பற்றி நினைத்துக் கூட பார்க்க முடியாத விடயமாகும். அதில் புகையிரத சேவை முன்னுரிமையான சிறப்புத் தன்மைக்குரியதாகும். பயணிகள் பொது மக்களுக்காக வினைத்திறன் மிக்கதும், பாதுகாப்பானதும் சிக்கனமானதும், சூழல் பற்றுடையதுமான போக்குவரத்து வழிமுறையாக இலங்கையில் பயணிகள் போக்குவரத்து மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்கு பங்களிப்பு செய்யும் பிரதான போக்குவரத்து வழிமுறை பங்குதாரராக இலங்கை புகையிரத சேவை போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. தற் காலத்தில் பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளில் கூடிய கருசனையுடன் செயற்படும் இலங்கை புகையிரத சேவை காரியால சேவை, தூர பிரதேச சேவை, நகர்சேவை, விஷேட உல்லாச பயன மற்றும் மத விழா கால சேவை போன்றவற்றை மேற் கொண்டு வருகின்றது. இலங்கை பொருளாதாரத்தின் உள் நாட்டு மொத்த உற்பத்தியின் சேவை பிரிவிற்கு ஒத்துழைப்பாக பங்களிப்பை வழங்கி பல்வேறு சவால்களுக்கும் பிரச்சனைகளுக்கும் மத்தியில் மிகவும் வினைத்திறன் மிக்க புகையிரத சேவையை வழங்கும் நோக்குடன் தொடரான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதே போன்று அரசின் தேசிய கொள்கை திட்டத்தின் படி "சௌபாக்கிய நோக்குடன்" பயணித்து புகையிரத திணைக்களத்தின் செயல் திறன் திட்டத்தின் இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக கூடிய முன்னுரிமையை வழங்கியுள்ளது.

2021ம் வருடத்தின் இரண்டாம் மூன்றாம் கட்டங்களில் தோன்றிய கொவிட் வைரஸ் நிலைமையிலும் இலங்கை புகையிரத திணைக்களம் சகல புகையிரத இயக்க நடவடிக்கைகளிலும் மற்றும் நாளாந்த செயற்பாடுகளிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தும் அவ்வாறான சவால்கள் மற்றும் பிரச்சணைகளுக்கு மத்தியிலும் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக உச்ச பங்களிப்பை வழங்க இலங்கை புகையிரத சேவை தொடரான உழைப்பில் ஈடுபட்டது. நாளாந்த பொதுவாக புகையிரத போக்குவரத்து தடவை 390 அளவிலும், அதன் மூலம் நான்கு இலட்சம் பயணிகள் பயணித்ததுடன், பொருட்கள் போக்குவரத்து மூன்று தடவையும் எரிபொருள் ஏற்றியிறக்கல் 08 தடவையுமாக புகையிரத இயக்கச் செயற்பாடு மேற் கொள்ளப்பட்டது. 2020ம் வருடத்துடன் ஒப்பிடும் போது புகையிரத போக்குவரத்து தடவை 41% வீதத்தினால் குறைந்து காணப்படுவதுடன் அதற்கான பிரதான காரணம் நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக புகையிரதங்கள் பல இரத்துச் செய்யப்பட்டமையாகும்.

இந்திய கடண் உதவியின் கீழ் புகையிரத பெட்டிகள் 160 கொள்வனவு செய்யும் கருத்திட்டத்தின் கீழ் பயணிகள் பெட்டி 120 உம், 2021ம் வருட இறுதிக்குள் கிடைக்கப் பெற்றுள்ளது. அது 2021ம் வருடத்தில் புகையிரத சேவையின் வளர்ச்சிக்கும் பயணிகளின் போக்குவரத்து வசதிகளுக்காகவும் ஆரம்பிக்கப்பட்ட பிரதான புகையிரத அபிவிருத்தி கருத்திட்டமாகும். மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் கொழும்பு புர நகர் புகையிரத சேவையை மேம்படுத்துவதற்காக வேண்டி உன்மை நிலை பற்றி ஆராய்ந்து அக் கருத்திட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அபிவிருத்திக்காக பிரதான திட்டம் வகுக்கப்படலும் (Railway Master Plan) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

மேலும் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தின் சாதக தன்மையை மேலும் மேம்படுத்துவதற்காக வேண்டி மாஹோ – ஓமந்தை வரையிலான புகையிரத பாதையை புனரமைப்பு செய்தல் நடவடிக்கை புகையிரத அபிவிருத்திக்காக 2021ம் வருடத்தில் மேற் கொள்ளப்பட்ட பிரதான கருத்திட்டமாகும்.

மேலும் கரையோர புகையிரத பாதையில் தெற்கு பயாகலவிலிருந்து அலுத்கமை வரையில் புகையிரத இரட்டைப் பாதைக்கான ஆரம்ப கட்ட செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டதும், புத்தளம் பாதையில் குரன- நீர்கொழும்புக்கிடையில் புகையிரத இரட்டைப் பாதை அமைப்பு தற்போது மேற் கொள்ளப்படுகின்றது.

இலங்கை புகையிரத திணைக்களத்தில் நிலவும் சவால்களை வெற்றி கொண்டு நிரந்தரமான அபிவிருத்தி சங்கட்பத்தின் படி தனது செயற்பாட்டை மேற் கொள்கின்றது. அவ் இலக்கை அடைந்து கொள்வதற்காக உச்சளவு அர்ப்பணிப்புகளை மேற் கொண்டு சரியான நோக்கில் புகையிரத திணைக்களம் நடவடிக்கை மேற் கொள்கின்றது. விஷேடமான இந்திய கடண் உதவியின் கீலும் சீன கடண் உதவியின் கீலும் இந் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட சுகபோகமான புகையிரதங்கள் பயணிகள் போக்குவரத்து வசதிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதே போன்று சுற்றுலா பயணிகளை இலக்காக கொண்டு விஷேட புகையிரதங்களை ஈடுபடுத்தலினால் உல்லாசப் பயணிகள் கட்டமைப்புக்கு மிகவும் உறுதுனையாக அமைந்துள்ளது. விஷேடமாக புகையிரத போக்குவரத்தை இலங்கையின் சக்தி மிக்க போக்குவரத்து கட்டமைப்பாக மாற்றிக் கொள்வதற்கு பயணிகளை கவரும் வகையில் ஆய்வுகளை மேற் கொண்டு எதிர்காலத்தில் புகையிரத போக்குவரத்து தடவைகளை திட்டமிடுவதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளது. அதே போன்று தற்போதைய நிலைமைக்கு பொருந்தும் வகையில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி புகையிரத போக்குவரத்தின் செயல் திறனை மேம்படுத்தல் சாலச்சிறந்ததாகும்.

2021ம் வருடத்தில் பயணிகள் மில்லியன் 35.96 தொகையினர் பயணித்துள்ளதுடன், பயணிகள் கிலோ மீற்றர் 2158.16 ஆன தூரளவு பயனித்துள்ளது. அதே போன்று பொருட்கள் டொன் மில்லியன் 1.83 ஏற்றியிறக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அது பொருட்கள் கிலோ மீற்றர் டொன் 161.56 வாக போக்குவரத்து செய்யப்பட்டு இலங்கை புகையிரத சேவை தனது பங்களிப்பை வழங்கியுள்ளது. மேலும் வருடத்தின் முழு வருமானம் 41% வீதத்தினால் குறைந்துள்ளதை காட்டுகின்றது.

இவ் வருடத்தில் வருடம் பூராவவும் நிலவிய கொரோனா நிலைமை காரணமாக புகையிரத போக்குவரத்து தடவைகள் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் மேற் கொள்ளப்பட்டது. இதன் காரணமாக புகையிரத சேவைகளை ஆரம்பித்தல் மற்றும் விரிவு படுத்தல் மேற் கொள்ளப்படவில்லை.

கொரோன நிலைமையின் கீலும், பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தை வழங்குவதற்காக புகையிரத பாதைகளில் நிலவிய வேக கட்டுப்பாட்டை குறைத்துக் கொண்டு சேவையாளர் பற்றாக்குறை, நிதி நெருக்கடி, உட்கட்டமைப்பு வசதிகள் விடயம் சம்பந்தமாக உபாயமான முறையில் தீர்வுகளை பெற்று மக்களுக்கு விசுவாசமுள்ளதும், வசதியானதுமான புகையிரத சேவையை வழங்குவதற்காக தொடரான இயக்கச் செயற்பாட்டில் ஈடுபட்டது.

முன் நோக்கு

நடைமுறை அரசாங்கத்தின் போக்குவரத்து கொள்கையின் முக்கிய குறிக்கோளாவது பாதை நெரிசலுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதாகும். அதன் படி பெருந் தெருக்களில் பயணிக்கும் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக புகையிரதத்தை பயன் படுத்தல் பிரதான அபிலாஷையாகும். ஆரசின் கொள்கை திட்டத்தின் படி புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை பெருக்கிக் கொண்டு மிகவும் வினைத்திறன் மிக்கதும் சிக்கனதுமான புகையிரத சேவையை வழங்குதல் பிரதான நோக்கமாகும். அதன் படி புகையிர திணைக்களத்தின் எதிர் கால திட்டமிடல்கள் இந் நோக்கை அடிப்படையாக கொண்டு மேற் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் கீழ் மிகவும் கவரக் கூடியதும் சூழல் பற்றுள்ளதுமான போக்குவரத்து வழிமுறையாக புகையிரத சேவையை மாற்ற கிழுள்ள போற்றத்தக்க அபிவிருத்திகளை மேற் கொள்ள எதிர் பார்க்கப்படுகின்றது.

- வினைத்திறன் மிக்கதும் வசதியானதுமான புகையிரத சேவையை மேற்கொள்ளல்.
- பானந்துறை – கொழும்பு – வெயங்கொடை, ராகம – கட்டுநாயக்க – நீர் கொழும்பு மற்றும் மருதானை – ஹோமாகம போன்ற புகையிரத சேவைகளுக்காக மின்சார புகையிரத கட்டமைப்பை அறிமுகப்படுத்தலும் பொதுவான புகையிரத சேவைகளுக்கு மேலதிகமாக அதி சொகுசு காரியால புகையிரத சேவையை ஆரம்பித்தல்.
- புகையிரத சேவையின் நவீன மயப்படுத்தலின் கீழ் நவீன தொழில் நுட்ப முறையையும் டிஜிட்டல் ஆக்கத்தையும் அறிமுகம் செய்து புகையிரத பிரவேசப்பத்திரம் வழங்குதல் மற்றும் ஆசனம் ஒதுக்கீடு செய்தல் போன்றவற்றுக்கு ஒன்லயின் சேவையையும் ஈ பிரவேசப் பத்திரத்தையும் தன்னியக்க உட்செல்லல் மற்றும் வெளிச் செல்லல் வாயில்களை அமைத்தல்.
- பொருட்கள் போக்குவரத்திற்கு தேவையான புகையிரத என்ஞின்களை இறக்குமதி செய்தல், மற்றும் புகையிரத தட்டுகளை உள் நாட்டிலேயே தயாரித்தல் கொழும்பு, ஹம்பாந்தோட்டை, திருகோனமலை, காங்கேசன்துறை, போன்ற துறைமுகங்களில் புகையிரதத்தின் மூலம் பொருட்கள் போக்குவரத்திற்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்தல்.

எதிர்கால அபிவிருத்தி கருத்திட்டங்கள்

01.மாஹோ – ஓமந்தை புகையிரத பாதை புனரமைப்பு கருத்திட்டம்.

02. பொல்கஹவெல – குருநாகல் புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்.

03. குருநாகல் - மாஹோ சந்தி புகையிரத இரட்டைப் பாதையை அமைத்தல்.

04. புத்தளம் புகையிரத பாதையில் கட்டுநாயக்க – குரண வரை புகையிரத இரட்டைப் பாதையை அமைத்தல்

05. பழைய களனி பாலத்தை மீளமைத்தல்.

06. புகையிரத சேவைக்காக பிரதான திட்டத்தை தயாரித்தல்.

07. இலக்ரோனிக் பிரவேசப்பத்திரத்தை அறிமுகம் செய்தல்.

08. பயணிகள் பெட்டிகளை உற்பத்தி செய்தல்.

09. புதிய புகையிரத சமிக்கை கட்டமைப்பை நிர்மானித்தல்.

10. பாதுகாப்பான புகையிரத கடவை கட்டமைப்பை நிர்மானித்தல்.

11. பயணிகள் பெட்டி 200 புனரமைப்பு செய்யும் கருத்திட்டத்தின் இனைப்பாக மேலும் 100 பயணிகள் பெட்டிகளை புனரமைப்பு செய்தல்.

12.- தெற்கு – அலுத்கமை வரையில் புகையிரத இரட்டைப் பாதையை அமைத்தல்.

13. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் மேற் கொள்ளப்படும் கொழும்பு புர நகர் புகையிரத கருத்திட்டத்தின் கீழ் களுத்தறை – பொல்கஹவெல இடையில் மின்சார புகையிரத சேவையை ஆரம்பித்தல்.

நிதி முன்னேற்றம்

2021ம் வருடத்தில் இலங்கை புகையிரத திணைக்களம் சம்பாதித்த வருமானமும், செலவும் சம்பந்தமான தகவல்கள் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021 வருடத்தில் வருமானம் வகைப்படுத்தல்

#	வருமான வகை	வருமானம் (ரூபா. மில்) 2020	வருமானம் (ரூபா. மில்) 2021
01	பயணிகள்	3481.53	1606.84
02	பார்சல மற்றும் தபால்	89.09	59.00
03	பொருட்கள் மற்றும் பண்ணை வளம்	364.77	431.45
04	வேறு	631.24	581.45
மொத்தம்		**4566.64**	**2678.72**

அட்டவனை இல 04

செலவு வகை	செலவு (ரூபா.மி)
மீண்டுவரும் செலவினம்	12979.21
மூலதனச் செலவு	27436.85
மொத்தம்	40416.06

அட்டவனை இல 05

பிரதான போக்குவரத்து வழங்குனராக இலங்கை புகையிரத சேவை 2021ம் வருடத்திலும் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு பொருளாதாரத்தின் நாளாந்த போக்குவரத்து தேவையினை வழங்குவதுடன் 2021ம் வருடத்தின் இரண்டாம் கட்டத்தில் மீண்டும் தோன்றிய கொவிட் 19 காரணமாக புகையிரத போக்குவரத்து மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட செயற்பாடுகளில் பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தியது. இந் நிலைமை காரணமாக பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து பாரியளவு பின் தள்ளப்பட்டதுடன் முழு வருமானம், பயணிகள் தொகை, போன்றவையும் கணிசமானளவு பின்னடைந்து காணப்பட்டது.

2021ம் வருடத்தில் முழு வருமானம் ரூபா மில்லியன் 2678.72 வாக காணப்பட்டதுடன் அது 2020ம் வருடத்தில் ரூபா மில்லியன் 4566.64 வாக காணப்பட்டது. அதன் படி முழு வருமானத்தில் 41% குறைவடைந்துள்ளது. 2021ம் வருட இரண்டாம் கட்டத்தில் இருந்து மீண்டும் தோன்றிய கொரோனா வைரஸ் நிலைமையே இக் குறைவுக்கு தாக்கத்தை ஏற்படுத்திய பிரதான காரணமாகும். அதன்படி கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது பயணிகள் வருமானம் 54% வீதத்தினால் குறைந்துள்ளதுடன், பொருட்கள் போக்குவரத்தின் வருமானம் 18% வீதத்தினால் கூடியும் காணப்பட்டது. பொருட்கள் போக்குவரத்து வருமானம் கூடியமைக்கு பிறிமா மாவு ஏற்றியிறக்கல் ஆரம்பிக்கப்பட்டமை மணல் ஏற்றியிறக்கல் மேற் கொள்ளப்பட்டமை சீமெந்து போக்குவரத்து மற்றும் எரிபொருள் போன்றவை மேற் கொள்ளப்பட்டமையே இதற்கான காரணங்களாகும்.

2021ம் வருடத்தின் முழு வருமானம் ரூபா மில்லியன் 4041606 வானதுடன், அதனுல் ரூபா மில்லியன் 1297921 வான தொகை மீண்டுவரும் செலவீனமாகவும் ரூபா மில்லியன் 2743685 ஆன தொகை மூலதன செலவாகவும் காணப்பட்டது.இக் காலவெல்லைக்குள் மேற் கொள்ளப்பட்ட போக்குவரத்து கட்டுப்பாடு காரணமாக பயணிகள் புகையிரத போக்குவரத்தை மட்டுப்படுத்தி பொருட்கள் மற்றும் எரிபொருள் போக்குவரத்து தொடராக மேற் கொள்ளப்பட்டது.

இந் நிலைமையின் கீழ் புகையிரத தொடரணியின் பலுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பும் புகையிரத பாதை, கட்டிடம் , பாலம், மற்றும் சமிக்கை கட்டமைப்பு போன்ற பிரிவுகளில் நிர்மானிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. எவ்வாறிருந்தும் இக் காலவெல்லைக்குள் சேசையினை வினைத்திறனுடன் மேற் கொள்வதற்காக புகையிரத தொடரனியின் கொள்வனவு நடவடிக்கையினை தொடராக மேற் கொள்ள நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. அதன் படி குளிரூட்டப்பட்ட புகையிரத பவர்செட் 02 உம், பயணிகள் பெட்டி 160 உம், கொள்வனவு செய்வதற்காக ஆரம்ப கட்ட கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்பட்டு அதன் செயற்பாடு தொடராக மேற் கொள்ளப்பட்டன …

- மாஹோவிலிருந்து ஓமந்தை வரை புகையிரத பாதையை புனரமைப்பு செய்தல் கருத்திட்டம் தொடராக மேற் கொள்ளப்பட்டது.
- பயணிகள் பெட்டி 200 புனரமைப்பு செய்யும் கருத்திட்டத்தின் கீழ் பயணிகள் பெட்டி 100 புனரமைப்பு செய்தல்.
- ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் கொழும்பு புர நகர் புகையிரத கருத்திட்டத்தின் கீழ் உன்மை நிலையை கண்டறியும் நடவடிக்கை தொடராக மேற் கொள்ளப்பட்டது.
- புகையிரத சேவையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மேற் கொள்ளப்பட்ட நிறுவன மீளாய்வு நிகழ்ச்சி நிரலை (Enterprise Review Programme) தொடராக மேற் கொள்ளல்.
- கோவிட் -19 வைரஸ் நிலைமையின் கீழ் புகையிரத நிலையங்களின் துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகளை தொடராக மேற் கொள்ளல்.
- உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 புகையிரத நிலையங்களை மேம்படுத்தல் செயற்பாட்டை ஆரம்பித்தல்.

வாணிப நடவடிக்கை

குறித்த காலவெல்லைக்குள் புகையிரத வருமானத்தை உயர்த்திக் கொளவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வாணிப நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டது.

1.கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துடன் சேர்ந்து (சதோச) நுகர்வாளர்களின் நலன் கருதி கொழும்பு கோட்டை, ஹோமாகம, மற்றும் பாதுக்கை போன்ற புகையிரத நிலைய சூழலில் சதோச (Q Shop) ஆரம்பித்தல். மேலும் இவ்வருடத்தில் கொட்டாவ, மீகொடை, நாரஹேன்பிட்டி போன்ற புகையிரத நிலையங்களில் (Q Shop) ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. வாகன தரிப்பிடம் (23 புகையிரத சூழலில்) சிறிய விற்பனை நிலையங்கள் (மில்கோ) 13 உம், களஞ்சியசாலை குத்தகைக்கு விடுவதற்காக கேள்விமனு கோரப்பட்டுள்ளது.

3. தேயிலைச் சபை, தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபை போன்ற நிறுவனங்களில் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்க ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

4. சமூர்த்தி அமைச்சுடன் இணைந்து சமூர்த்தி உரித்தாளர்களின் குடிசை உற்பத்திகள் விற்பனை நிலையங்களை ஆரம்பித்தல்.

05.மரக்கறி ஏற்றியிறக்கலுக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

06. ஹொல்சிம் நிறுவனத்துடன் இணைந்து அருவக்காடு இலிருந்து பூஸ்ஸா வரை சுன்னாம்பு கற்கள் ஏற்றியிறக்கலுக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

2021ம் வருடத்திலும் நிலவிய கொவிட்-19 வைரஸ் காரணமாக புகையிரத பாதை, கட்டிடம் , பாலம் மற்றும் சமிக்கை கட்டமைப்பு போன்ற பிரிவுகளில் கீழ்க் குறிப்பிடப்படும் பிரதான அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டாலும் இக் காலவெல்லைக்குள் கீழ் குறிப்பிடப்படும் அபிவிருத்தி நடவடிக்கை தொடராக மேற் கொள்ளப்பட்டது.

- புகையிரத பாதைகளின் பராமரிப்பு நடவடிக்கை தொடராக மேற் கொள்ளப்பட்டது
- கண்டி, பேராதெனிய, மற்றும் கடுகன்னாவ புகையிரத பாதையுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் தொடராக மேற் கொள்ளப்பட்டது.
- கட்டுநாயக்கவிலிருந்து கொச்சிக்கடை வரையில் புகையிரத இரட்டை பாதை நிர்மானித்தலை குரன வரையில் நிறைவு செய்தல்.
- புதிய புகையிரத நிலைய கட்டிடம் நிர்மானித்தல், பாலம் பராமரித்தல், மற்றும் புகையிரத நிலையங்களில் மலசல கூட வசதிகளை அமைத்தலை தொடராக மேற் கொள்ளல்.
- சமிக்கை மற்றும் தொலைத் தெடர்பு கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் பராமரித்தலை தொடராக மேற் கொள்ளல்.
- பொல்கஹவெலவிலிருந்து குருநாகல் வரையில் புகையிரத இரட்டை பாதையை நிர்மானித்தல் கருத்திட்டத்தின் அடிப்படை செயற்பாடுகளை தொடராக மேற் கொள்ளல்.
- பயாகல தெற்கிலிருந்து அலுத்கம வரையிலான புகையிரத இரட்டை பாதையை நிர்மானித்தல் கருத்திட்டத்தின் அடிப்படை செயற்பாடுகளை தொடராக மேற் கொள்ளல்.
- மாஹோ சந்தியிலிருந்து ஓமந்தை வரையிலான புகையிரத பாதை புனரமைப்பு செய்தல் நடவடிக்கைகளை தொடராக மேற் கொள்ளல்.

புகையிரத தொடரணி

வினைத்திறன் மிக்க பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தினை வழங்குவதற்காக இலங்கை புகையிரத சேவையின் புகையிரத தொடரணியை தொடராக பராமரித்தல் மற்றும் பலுது பார்ப்புகள் இக் காலவெல்லைக்குள் மேற் கொள்ளப்பட்டது. 2021ம் வருடத்தில் மீண்டும் தலை தூக்கிய கொவிட் 19 காரணமாக புகையிரத தொடரணியின் பராமரிப்பு மற்றும் பலுதுபார்ப்புகள் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டது.

எவ்வாறிருந்தும் பிரதான பலுதுபார்ப்புக்ள 800 அளவிலும், சிறி பலுதுபார்ப்புகள் 26706 உம் இக்காலவெல்லைக்குள் மேற் கொள்ளப்பட்டது. பயணிகள் பெட்டி புனரமைப்பு, பவரசெட், என்ஞின், கெல் 4 மற்றும் ரயில் பஸ் பலுதுபார்ப்பு, என்ஞின் புனரமைப்பு மற்றும் ரீ என்ஞின் பொருத்தல், இயந்திர உபகரணங்கள் பலுதுபார்ப்பு பராமரிப்பு போன்றவை இக்கால வெல்லைக்குள் தொடராக மேற் கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக 200 பயணிகள் பெட்டிகள் புனரமைப்பு செய்யும் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் குளிரூட்டப்பட்ட டீசல் பவர்செட் 02 தொகுதிகளும் பயணிகள் பெட்டி 160உம், கொள்வனவு செய்வதற்காக ஆரம்ப கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் தற்போது பயணிகள் பெட்டி 160ல் 80 இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

பயணிகள் பெட்டி 200 புனரமைப்பு செய்யும் கருத்திட்டத்தின் தொடராக மேலும் பயணிகள் பெட்டி 100 யின் புனரமைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் 30 பெட்டிகளின் வேலைகள் முடிவுற்றுள்ளது.

பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து

2020ம் வருடத்தில் பயணிகள் மில்லியன் 68.08 வான அளவினர் புகையிரதத்தில் பயணித்ததுடன், 2021ம் வருடத்தில் 35.96 வான அளவினர் பயனித்துள்ளனர். அது 2020 வருடத்துடன் ஒப்பிடும் போது 45% வீத குறைவை காட்டுகின்றது. இவ்வாறு குறைவு ஏற்படுவதற்கு மிகவும் முக்கியமான காரணம் 2021ம் வருடத்தில் அடிக்கடி நிலவிய கொவிட் 19 நிலைமையும் அதன் காரணமாக பயணத்தடை விதித்தல் காரணமாக சேவைக்கு வரவழைத்தல் மட்டுப்படுத்தலினால் புகையிரத போக்குவரத்து தடவைகளும் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் மேற் கொள்ளப்பட்டது.

பயணித்த பயணிகள் தொகையும் பயணிகள் வருமானமும்

வருடம்	பயணித்த பயணிகள் தொகை (மி)	பயணிகள் வருமானம் ரூபா.மி	பயணிகள் கி.மீ (மி)
2020	65.08	3481.53	3905.55
2021	35.96	1606.83	2158.16

அட்டவணை இல.06

பொருட்கள் வருமானமும் ஏற்றியிறக்கப்பட்ட பொருட்களின் அளவும்

வருடம்	பொருட்கள் வருமானம் ரூ.(மி)	பொருட்கள் அளவு டொன். (மி)	டொன் கி.மீ அளவு (மி)
2020	364.77	1.78	114.37
2021	431.45	1.83	161.56

அட்டவணை இல.07

- 2021ம் வருடத்தில் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கை சம்பந்தமாக கருதும் போது பொருட்கள் போக்குவரத்து வருமானம் 18.28% வீதமும் பொருட்கள் டொன் அளவு 2.80% மும், டொன் கி.மீ அளவு 1.92% அளவும் குறைந்துள்ளது. கொவிட் நிலைமைக்கு மத்தியிலும்

எரிபொருள் ஏற்றியிறக்கல் நடவடிக்கை தொடராக மேற் கொள்ளப்பட்டமை இதற்கு காரணமானது.

இயக்க காட்டி

இல	செயல் திறன் காட்டி	2020	2021
01	புகையிரத வருமானம் (ரூ.மி)	4566.64	2678.74
02	பயணித்த பயணிகள் தொகை (மி)	65.08	35.96
03	பயணிகள் கி.மீ அளவு (மில்லியன்)	3905.55	2158.16
04	ஏற்றியிறக்கப்பட்ட பொருட்கள் டொன் அளவு (மில்லியன்)	1.78	1.83
05	பொருட்கள் டொன் கி.மீ (மி)	114.37	161.56

அட்டவணை இல.08

முழு புகையிரத போக்குவரத்து

புகையிரத சேவை	திட்டமிடப்பட்ட புகையிரத தொகை	போக்குவரத்தில் ஈடுபட்ட புகையிரத தொகை
புர நகர்	45,095	39,209
பிரதேச	17,356	13,993
தூர மற்றும் நகர் சேவை	12,118	9,014
ரேல் பஸ்	1,694	1,471
i பயணிகள்	**76,263**	**63,687**
ii பொருட்கள்	**7,961**	**5,349**
மொத்தம்	**84,224**	**69,036**

அட்டவனை 09

மேற் கூறப்பட்ட அட்டவணை இல 09ல் குறிப்பிடப்பட்ட தகவல்களின் படி 2021ம் வருடத்திற்குள் போக்குவரத்திற்காக திட்டமிடப்பட்ட பயணிகள் புகையிரத தொகை **76263** ஆவதுடன் அதில் **63687** புகையிரதம் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டது. அதை விகிதாசாரமாக கருதுமிடத்து 83% வீதமாகும். பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து குறைவதற்கு கொவிட்-19 காரணமாக நாட்டில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டமையும் நாடு முடக்கப்பட்மையும் காரத்தினால் புகையிரத போக்குவரத்தை மட்டுப்படுத்தலில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியது.

நிரந்தர பாதை கட்டமைப்பும் கட்டிடமும்

நிரந்தர பாதைகள் கட்டமைப்பின் பராமரிப்பு நடவடிக்கை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடராக மேற் கொள்ளப்பட்டதுடன் அதற்காக தண்டவாளம் மீற்றர் 180607 வும், கொங்கிரீட் சில்பர் 58597 உம், மரக்குற்றி சில்பர் 50923உம், ப்ளஸ்ட் கியூப் 19223 உம், பயன்படுத்தப்பட்டது.

புகையிரத பாதை பராமரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்கள்

பயன்படுத்தப்பட்ட பொருட்கள	அளவு
தண்டவாளம் (மீற்றர்)	180,607
மர குற்றி சில்பர்	50,923
உருக்கு சில்பர்	392
கொங்கிரீட் சில்பர்	58,597
ப்ளஸ்ட் கியூப்	19,223

அட்டவனை இல 10

சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பு

சமிக்கை கட்டமைப்பின் தொடரான பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கை போன்றவை வினைத்தின் மிக்க புகையிரத சேவையை மேற் கொள்வதற்கு முக்கியமான சாதகமாகும் 2021ம் வருடத்திலும் சமிக்கை கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் பலுதுபார்த்தல்களை தொடராக மேற் கொண்டு கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் செயற்படுத்தப்பட்டது.

1. குரணவிலிருந்து நீர் கொழும்பு வரையிலான புகையிரத இரட்டை பாதையின் 60% வீத வேலைகள் நிறைவு பெற்றுள்ளது.
2. வனவாசல புதிய கழிவுப் பொருட்கள் அகற்றல் முகாமைத்துவ நிலையத்திற்கு புதிய சமிக்கை கட்டமைப்பு நிர்மானித்தலின் 50% வீத வேலைகள் முடிவுற்றுள்ளது.
3. புகையிரத பாதுகாப்பு கடவை பாதை (Bell & Light) கட்டமைப்பு 02 நிர்மானிக்கப்பட்டுள்ளது.
4. மின் ஒலி மற்றும் மின் குமிழ் பாதுகாப்பு கட்டமைப்பு 10 நிறுவப்பட்டுள்ளது.

5. வெல்லவ புகையிரத நிலையத்தின் புதிய சமிக்கை கட்டமைப்பின் 80% வீத வேலைகள் முடிவுற்றுள்ளது.
6. சமிக்கை நிலையம் (Points) 75 நவீன மயப்படுத்தப்பட்டுள்ளது.

சவால்களும் குளறுபாடுகளும்

1. பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளில் நிலவும் குறைபாடுகள்.
2. சகல புகையிரத பாதைகளிலும் காணப்படும் பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளின் தொகை கூடிக் காணப்படல்.
3. குறைவான முறையில் தண்டப் பணம் அறவிடல்
4. பழைய என்ஜின்களின் எண்ணிக்கை
5. பயிற்சி பெற்றவர்களின் குறைவு

நாளாந்த சேவையை மேற் கொள்ளும் போது சகல பிரிவுகளிலும் நிலவும் சேவையாளர்களின் பற்றாக்குறை காரணமாக குறித்த விடயங்களின் போது குளறுபாடான விடயங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

மீண்டுவரும் செலவினம் உயர்ந்து காணப்படல்.

மீண்டுவரும் செலவினத்திற்கு உட்படும் ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் எரிபொருட்களின் செலவுகள் உயர் மட்டத்தில் நிலவுவதால் வருமானத்திற்கும் மற்றும் மீண்டுவரும் செலவினத்திற்கும் இடையில் காணப்படும் பாதகமான நிதி இடைவெளியை தொடராக காணக் கூடியதாக உள்ளது.

1. புகையிரத தொடரணி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் நிலவும் பற்றாக்குறை காரணமாக புகையிரத திணைக்களம் தமது சேவையையை வினைத்திறனுடன் வழங்குவதில் பல இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.
2. சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பு மிகவும் பழமையானதாக காணப்படல்.
3. புகையிரத காணிகளில் அனுமதியற்ற வதிவாளர்கள்.
4. பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை குறைவாக காணப்படல்..
5. காணி முகாமைத்துவம், இயக்க முகாமைத்துவம், தொகை கையிருப்பு , மணிதவள முகாமைத்துவம், பராமரிப்பு போன்ற பிரிவுகளின் தகவல் தொழில் நுட்பம் குறைவான காணப்படல்.

